DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகானந்தம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனிச்சாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.12.2022.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தோட்டத்திற்கு தென்புறமாக கா.சா.எண்..110 கனராஜ் என்பவர் பூமி உள்ளது என்றால் சரிதான். தோட்டத்திற்கு வடபுறமாக ஜம்முக்கல் ஒடை உள்ளது என்றால் சரிதான். எனது தோட்டத்திற்கு கிழபுறமாக 111 நம்பர் சாலையில் சுப்பிரமணி என்பவர் புதிதாக பூமி வாங்கி இருந்தார் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணி பூமிக்கு கிழபுறம் சாமியப்பன் பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த சுற்று வட்டாரத்தில் 2ம் எதிரி கருப்பன்னனுக்கு பூமி இல்லை என்று சொன்னால் சரியல்ல உள்ளது. என்ன கா.சா. எண்ணில் உள்ளது என்றால் கருப்பன்னன் பெயரில் இல்லை அவரது உறவினருக்கு உள்ளது. மேற்படி எனது முதல் விசாரணையில் எனது பூமிக்கு தென்புறம் 2ம் எதிரி கருப்பன்னன் பூமி உள்ளது என்று நான் சொல்லியுள்ள நிலையில் எங்கு உள்ளது என்றால் என் பூமிக்கு தென்புறமாக 2ம் எதிரி கருப்பன்னனின் சம்பந்தி பூமி உள்ளது அது அவரது மருமகள் பெயரில் உள்ளது.

2. நான் என் பூமிக்கு தென்புறமாக எதிரிக்கு சொந்தமான பூமி உள்ளது என்று குறிப்பிடுவது பொய் என்று சொன்னால் கனராஜ் பூமிக்கு தென்புறம்

2ம் எதிரியின் மருகள் சத்தியபிரியா பெயரில் உள்ளது. 2ம் எதிரியின் கிழக்குபுறம் உள்ள பூமியில் இருந்து தென்புறம் உள்ள பூமிக்கு பைப் லைனில் இருந்து தண்ணீர் கொண்டு போவதை யாரோ தடுத்ததற்கு நான் தடுத்ததாக நினைத்து என்னை தாக்கியதாக நான் புகார் கொடுத்துளளேன் என்றால் சரிதான். என் பூமியை சுற்றி 2ம் எதிரிக்கு பூமியே கிடையாது எனவே கிழக்கு புறம் இருந்து தென்புறம் தண்ணீர் கொண்டு போக அவசியம் இல்லை என்றால் சரியல்ல அவரது மருகள் பூமியில் இருந்து தண்ணீர் கொண்டுபோவதற்கு பிரச்சனை செய்தார் என்று பின்பு தான் எனக்கு தெரிந்தது. நான் வழக்கிற்காக இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. பொதுவாக 6,7 லிட்டர் பாலை என்னுடை Hero Honda splender வண்டியில் நான் தான் எடுத்து செல்வேன் வீட்டிற்கு பொருள் வாங்க வேண்டும் என்றால் என் மனைவியும் என்னுடன் வருவார். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஒரு தம்பி உள்ளார் அவர் பெயர் குணசேகரன் அவருக்கும் எனக்கும் சிவில் வழக்கு உள்ளதா என்றால் உள்ளது. என் தம்பி 2019ல் எங்கு வசித்து வருகிறார் என்றால் அவரது சொந்த வீட்டில் வசித்து வந்தார் அதற்கு முன்பு 2ம் எதிரி வீட்டில் என் தம்பி குடியிருந்தார் என்றால் சரிதான். எனக்கும் என் தம்பிக்கும் உள்ள பிரச்சணைக்கு 2ம் எதிரி மற்ற எதிரிகள் அவருக்கு ஆதரவாக நடந்து கொண்டதாகவும் எனக்கு எதிராக நடப்பதற்கு அவர்கள் தான் காரணம் என்றும் நான் அவர்கள் மீது முன் விரோதம் கொண்டேன் என்றால் சரியல்ல. குறிப்பாக எங்கு அடிதடி பிரச்சணை நடந்தது என்றால் தன்னாசியப்பன் கோயில் அருகே நடந்தது. அங்கே தென் வடல் வண்டிப்பாதை உள்ளது.

4. நான் என் தம்பி மீது உடுமலை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வா.எண்.453/18–ல்தாக்கல் செய்திருந்தேன் என்றால் செய்திருந்தேன். மேற்படி வழக்கில் சொல்லியுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு எப்போது இடது கை எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சம்பவம் நடந்த அன்று. அதற்கு காரணம் ஆஜர் எதிரிகள் தான் என்றால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் அ.வா.எண்.453/18ன் வழக்குறை ஆவணம் எமசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி வாதுரையின் 5ம் பத்தியில் தாயாருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரிவினை செய்யாமல் இருக்கும்பட்சத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களில் வாதி விவசாயம் ஏதும் செய்யக்கூடாது என்று 1ம் பிரதிவாதி தகராறு செய்து வந்தார். அவருக்கு உறுதுணையாக 2ம் பிரதிவாதியும் செயல்பட்டு வருகிறார். சுமார் 3 மாதங்களுக்கு முன்பு வாதியின் 1வது அயிட்ட சொத்துக்களுக்கு அருகாமையில் உள்ள மூன்றாம் நபர்கள் அவர்கள்**

**பூமிக்கு நிலத்தடிக்குழாய் அமைப்பதற்கு வாதியிடம் அனுமதி கேட்டதில் வாதி மறுக்கவே மேற்படி நபர்கள் அத்துமீறி வாதியின் பூமியில் நுழைந்து வாதியை சட்ட விரோதமாக தாக்கி காயப்படுத்திவிட்டார்)**

5. மேற்படி அசல் வழக்கில் என்னுடைய பூமியில் வந்து எதிரிகள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் என்னுடைய பூமியில் நடந்ததாக சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் எமசாஆ.1 ஆவணத்தின் 3ம் நபர்கள் என் பூமியில் வந்து அடித்து தாக்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய அசல் வழக்கில் மேற்படி 3ம் நபர்கள் என்னுடைய பூமிக்குள் வந்து என்னை தாக்கினார்கள் என்றும் அதே 3ம் நபர்கள் என்னை கோயிலுக்கு அருகில் வைத்து தாக்கினார்கள் என்று புகாரிலும் சூழ்நிலைக்கு தக்கவாறு மாற்றி சாட்சியம் அளித்துள்ளதால் நான் நம்பத்தகுந்த சாட்சி அல்ல என்று சொன்னால் சரியல்ல.

6. தன்னாசியப்பன் கோயிலுக்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீ இருக்கும். என் வீட்டிற்கும் தன்னாசியப்பன் கோயிலுக்கும் 1 கிமீ துாரம் இருக்கும் என்றால் சரியல்ல 250 மீ இருக்கும். தன்னாசியப்பன் கோயிலுக்கும் சாமியப்பன் பூமிக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 750 மீ இருக்கும் என் வீட்டில் இருந்து பார்த்தால் தன்னாசியப்பன் கோயில் தெரியுமா தெரியாதா என்றால் தெரியும். நான் வீட்டில் இருந்து புறப்படும்போது நான்கு நபர்கள் வழிமறித்து நிற்பது தெரிந்து ஏன் நான் அங்குபோனேன் என்றால் கோயில் பக்கம் போனபோது தான் தெரிந்தது மறைவில் இருந்த நபர்கள் திடீரென வந்து தடுத்தார்கள். என்னுடைய புகாரிலோ, போலிசார் வாக்குமூலத்திலோ, முதல் விசாரணையிலோ எதிரிகள் மறைந்து இருந்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. நான் சென்ற பைக்கிற்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு எந்த கீரலும் இல்லை என்றால் சரிதான். அடிதடி எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 10 நிமிடம் நடந்தது. என் மனைவி எதிரிகளை தடுக்க முயற்ச்சி செய்யவில்லை என்றால் அழுது சத்தம்போட்டு குறுக்காட்டினார் பக்கம் போய் விட்டுவிடுங்கள் என்று கூறியுள்ளார். மேற்படி விவரத்தை எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனது மண்டை உடைந்து ரத்தம் வந்து துணிமணிகளில் ரத்தம்பட்டு நிலத்திலும் ரத்தம் சிந்தி இருந்ததா என்றால் ஆமாம். ரத்தக்கறை ஏற்பட்ட துணியை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கேட்கவில்லை கொடுக்கவில்லை. என்னை அடிக்க பயன்படுத்திய இரும்பு எங்கிருந்து எடுக்கப்பட்டது என்றால் தனசேகரன் கையில் வைத்திருந்தார். என்னுடைய புகாரிலோ, போலிசார்

வாக்குமூலத்திலோ, முதல் விசாரணையிலோ 1ம் எதிரி கம்பியை மறைத்து வைத்திருந்தார் என்று நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் 1ம் எதிரி கையில் மறைத்து வைத்திருந்தார் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன். அந்த கம்பியின் நீளம் எவ்வளவு நீளம் என்றால் சுமார் 2 ½ நீளம் இருக்கும்.

8. மேற்படி 2 ½ அடி நீளம் உள்ள கம்பியை மறைத்து வைக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. குறிப்பிட்டு யார் யார் எங்கு தாக்கியதால் காயம் ஏற்பட்டது என்றால் சரிநாதன் கார்த்திக்குமார், கருப்பன்னன் ஆசிரியர் ஆகியோர் கண்ணத்திலும் முதுகிலும் அடித்து கீழே தள்ளி காலில் எட்டி உதைத்து கருப்பன்னன் அப்போது கண்டாரோழி மகனே தாயோழி மகனே என்று திட்டி எட்டி உதைத்தார். அப்போது 1ம் எதிரி தனசேகரன் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியால் தலையில் அடித்தார். அப்போது இடது கையால் நான் தடுத்தபோது என் விரலில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. கம்பியால் இடித்தபோது என் மூக்கிற்கு கீழே ரத்தக்காயம் ஏற்பட்டது. மேலும் மேற்படி எதிரிகள் தாக்கியதால் எனக்கு இடது கை மணிக்கட்டுக்கு கீழே எலும்பு முறிவு ஏற்பட்டது. இடது கையில் சுண்டு விரல் மற்றும் மோதிர விரல் அடிப்பட்டதில் கட்டாகிவிட்டது. (சாட்சி தன்னிடம் இருந்த X Ray வை காட்டி மேற்படி விவரத்தை கூறினார்). மூக்கில் மேற்படி எதிரிகள் தாக்கியபோது நுனி இடது புற மூக்கின் நுனி கட்டாகிவிட்டது.

9. குறிப்பாக யார் என்னை எங்கு அடித்தார்கள் என்றால் ஒருவர் வலது கண்ணத்தில், இன்னொருவர் இடது கண்ணத்திலும், இன்னொருவர் முதுகில் கையால் அடித்தார்கள் கீழே விழுந்தபோது கருப்பன்ன வாத்தியார் தகாத வார்த்தையால் பேசி எட்டி உதைத்தார். எனக்கு கை முறிவு ஏற்பட்டிருந்தால் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அதை பார்த்திருப்பார்கள் என்றால் இடது கை மோதிர விரல் மற்றும் சுண்டு விரலில் ஏற்பட்ட காயத்திற்கு தான் X Ray GH ல் எடுத்தார்கள் அதுவும் கையில் மணிக்கட்டுக்கு கீழே தான் எடுத்தார்கள் பின்பு நான் வலி உள்ளது என்று அதற்கு மேல் உள்ள பகுதியில் என்று சொன்னபோது மாத்திரை மட்டும் கொடுத்தார். மருத்துவரிடம் குறிப்பிட்டுள்ள விவரங்களை நான் கூறவில்லை என்றால் சரியல்ல நான் தான் கூறினேன். நான் மருத்துவரிடம் 4 தெரிந்த நபர்களும் 3 தெரியாது நபர்களும் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ, மேற்படி 3 நபர்களை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

10. தன்னாசியப்பன் கோயில் முன்பு கற்குவியல் இருந்ததா என்றால் அப்போது இல்லை மணல் இருந்ததா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் மழைக்காலம் என்பதால் கட்டிடம் கட்டுவதற்காக

வைக்கப்பட்டிருந்த கற்கல் கல் குவியல் மீது பைக்குடன் கீழே விழுந்து ஏற்பட்ட காயங்களை வைத்து எதிரிகள் மீது எனக்கும் என் தம்பிக்கும் பிரச்சணை ஏற்படுத்தியவர்கள் என்று நினைத்து அவர்கள் மீது கொண்ட முன் விரோதம் காரணமாக இந்த பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. குறிப்பாக சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 6.15 மணி இருக்கும். 2ம் எதிரி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். அவருக்கு சுமார் 70 வயது இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. 18.09.18 அன்று 2ம் எதிரி கருப்பன்னன் தனது தோள்பட்டை வலிக்காக உடுமலை கோகுல் பாலி கிளினிக் மருத்துவரிடம் சிகிச்சையில் இருந்தார் என்றால் தவறு. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல அந்த தேதியில் அந்தமாதிரி சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு 85 வயது ஆகும்.

11. என் மனைவி சத்தம்போட்டதை கேட்டதும் 85 வயதான என் அப்பா சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் என் மகளின் துணையோடு வந்தார். சம்பவ சமயத்தில் இருந்து இன்று வரை என் அப்பா நடக்க முடியால் இருந்து வருவதால் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் என் அப்பா அவரே நடந்து கொள்கிறார். எதிரிகள் என் காட்டிற்குள் பைப் லைன்போட தோண்டி இருந்தால் அதற்கான அடையாளம் இருந்திருக்கும் என்றால் அப்போது இருந்தது. இந்த வழக்கில் என்னை தவிர்த்து மற்றவர்கள் என் குடும்பத்தை சேர்ந்தவர்களா என்றால் சரிதான். சாமியப்பன் சம்பவ இடத்திற்கு எவ்வாறு வந்தார் என்றால் என் வீட்டில் பால் வாங்குவதற்காக காலை மாலை இரண்டு நேரமும் வருவார் அன்று பைக்கில் அவ்வாறு வந்தார். மேற்படி விவரத்தை எனது போலிசார் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் போலிசார் கேட்கவில்லை சொல்லவில்லை. போலிசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 19.09.2018 அன்று உடுமலை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

12. புகார் கொடுத்தற்கு பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 3,4 எதிரிகள் 1ம் எதிரியின் தோட்டத்தில் பணிபுரிவர்கள் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் அடிக்க பயன்படுத்திய கம்பியில் ரத்தம் ஆனதா என்றால் சாட்சி முதலில் இந்தது என்று கூறிவிட் பின்பு நான் கவனிக்கவில்லை என்று கூறுகிறார். மேற்படி கம்பி வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிருஷ்ணகுமார் மருத்துவரிடம் எத்தனை பேர் சேர்ந்து என்னை எங்கு அடித்தார்கள் என்று கூறினேனா என்றால் இல்லை. நான் வண்டியில் இருந்து கல் குவியல் மீது விழுந்து ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்று மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல அதனால் தான் சம்பவம் நடந்த

இடம் அசல் வழக்கில் என்னுடைய பூமி என்றும் இந்த புகாரில் தன்னாசியப்பன் கோயில் என்றும் மா்ற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கம்பியை 1ம் எதிரி என்னிடம் காட்டி மிரட்டிவிட்டு எடுத்துச் சென்றுவிட்டார். நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-K.Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.